# பிரேம வாஹினி

பகவான்

ஸ்ரீ சத்ய சாயி பாபா

**40. Start Spiritual Practise at the Earliest Moment**

## இக்கணமே ஆன்மீக சாதனையை செய்யத் துவங்கு!

எமனும் சிவனைப் போலவே எங்கும் நிறைந்தவன், எமன் தேகம் அல்லது உடலுடன் தொடர்புடையவன்; அவனால் ஆன்மாவை ஒன்றும் செய்ய முடியாது. சிவன் ஜீவனுடன் (ஆன்மாவுடன்) தொடர்புடையவர்; ஆனால் அவர் உடலை எத்தனை காலத்துக்கும் நீடிக்க அனுமதிப்பதில்லை. ஜீவனின் இன்றியமையா வாகனம் உடல்; அது தன் உண்மையான இயல்பை ஜீவன் புரிந்துகொள்ள உதவுகிறது. எமனின் கயிற்றுக்குள் இவ்வுடல் எப்போது சுருட்டப்படும் என்பதை யாரறிவார்? எளிதில் அழியக்கூடிய இவ்வுடலைச் சுமக்கும் ஜீவன் மேலே விடுக்கப்பட்ட எச்சரிக்கையை மனதில் பதித்துக்கொள்ள வேண்டும். சிவனுடன் ஐக்கியமாகும் பேராவலுடன் இருக்க வேண்டும்; இந்த நொடி, அந்த நொடி, எந்த நொடியாக இருப்பினும் கடந்த காலத்தின் ஒரு நொடியைக்கூட திரும்பப்பெற இயலாது. பொதுவாக மக்கள் எதையாவது செய்து கொண்டு ( நேற்றைக்குரியதை இன்றைக்கும் இன்றைக்குரியதை நாளைக்கும்) தாமதப்படுத்துவது வழக்கம். ஆனால் சாதனைக்குரிய செயல்கள் இப்படிப்பட்ட இயல்பு உடையன அல்ல; அவர்களுக்கு நேற்றுமில்லை, நாளையுமில்லை, இந்த நொடி ஒன்றுதான் அவர்களின் சொந்த நொடி! உங்களிடமிருந்து நழுவிய நிமிடத்தைத் திரும்பப் பெறுவது உங்கள் சக்திக்கு அப்பாற்பட்டது; அதைபோலவே அடுத்து உங்களை அணுக இருக்கும் நொடியும் உங்களுடையதல்ல! இதைக் கல் எழுத்தாக மனத்தில் பதிக்கும் ஜீவனே சிவனுடன் ஐக்கியமாக முடியும்.

41. Seek the vision of the Divine, Not Death

## சிவ தரிசனம் பெறு! எம தரிசனம் அல்ல

இந்த உண்மையை இதயத்தில் பதியாமல் உடலே இன்றியமையாதது என்று அனுமானித்துக் கொண்டு ஜீவன் நேற்றிலும் நாளையிலும் மூழ்கியிருக்கிறது; இப்படியாக உலகப்பற்றுக்கான அடிக்கல்லை அது நாட்டுகிறது; அதனால் அது மீண்டும் மீண்டும் உடலுடன் பிறந்து, எமனின் தரிசனைத்தைத் தொடர்ந்து பெறுகிறது. சிவதரிசனம் ( எம தரிசனம் அல்ல) பெறுவதே சாதகனின் உரிமை; அப்படிப்பட்ட சாதகன் உடலுக்காக உடலுடன் இருப்பதில்லை. அவன் அதைப் பொருட்படுத்துவதே இல்லை. உடலுக்கும் உயிருக்கும் உள்ள இந்த உறவு முறையை அறிந்தவர்கள் மட்டுமே மனிதர்கள். இந்தக் கோட்பாட்டை உணர்ந்தவர்கள் தங்கள் சாதனையிலிருந்து அணுவளவும் வழுவமாட்டார்கள். இன்று மனிதன் விரைந்து மறைகின்ற காட்சிகளிலும் உலக இன்பங்களை அனுபவிப்பதிலும் மன நிறைவு பெறுகிறான். இரவில் உறங்குவதும், பகலில் உண்பதும் பருகுவதுமாக அவன் வளர்கிறான்; வளர்ந்து கொண்டே இருக்கிறான்; அவன் முதுமையுற்று, மரணமடையும்வரை அப்படி வளர்கிறான். அப்போது எங்கே போவது, என்ன செய்வதென முடிவு செய்ய அவனால் இயலாது.

அவனுடைய புலன்கள் அனைத்தும் பலவீனமுற்றபின் அவனைக் காப்பாற்ற எதனாலும் இயலாது; அதனால் முடிவில் அவன் மரணத்தின் கோரப்பற்களுக்கு சுவையான மாமிசமாகத் தன்னை அர்ப்பணிக்கிறான்.

மானிட வாழ்வு எத்தனை சோகமயமானது, விலை மதிப்பிட முடியாத உன்னதமான வைரம் போன்ற ஒன்று, சிதைந்து மதிப்பிழந்த காசைபோல் மலிவாகி விட்டதே! இறைவன் மீது தியானம் செய்யாமல், அவரை உணர்வதர்குரிய சாதனை எதையும் செய்யாமல் ஒரு லாபமும் இல்லாமல் நேரத்தை வீணாக்கிய பிறகு வருந்துவதால் என்ன பயன்? தோண்டுவதற்குரிய நேரமா இது? தண்ணீர் எப்போது கிடைக்கும்? தீயை அணைப்பது எப்போது? இது நடக்கக்கூடிய காரியமா? முன்பே ஒரு கிணறு தயாராக இருந்திருந்தால் இப்படிப் பட்ட இக்கட்டான சந்தர்ப்பங்களில் அது எத்துணை உதவியாக இருந்திருக்கும்! இறுதி நேரத்தில் இறைவனைச் சிந்திக்க ஆரம்பிப்பது தீப்பற்றிய பிறகு கிணறு தோண்டுவதைப் போன்றதுதான்.

எனவே ஒருவர் இப்போதிருந்தே இறைச்சிந்தனையில் இடைவிடாமல் ஆழ்ந்தால்தான் அது இறுதி நேரம் நெருங்கும்போது நன்மை நல்குவதாக அமையும். நாளைக்குரிய சாதனத்தை இன்றே தொடங்குக. இன்று தொடங்க இருக்கும் சாதனையை இப்போதே தொடங்குக. அடுத்த நொடியில் என்ன நடக்கும் என்பதை அறிந்தவர் யார்? எனவே செய்ய வேண்டிய சாதனையை யாரும் தாமதப்படுத்தக்கூடாது. உடல் பலமும் இந்த சாதனைக்கு அவசியம். எனவே உடலையும் பேண வேண்டும். பேணும்போது சில பாதிப்புகள் ஏற்படினும் பேணத்தான் வேண்டும்; அத்யாவசிய தேவையளவிற்கேனும் அதை மிகுந்த அக்கறையுடன் காப்பற்றத்தான் வேண்டும்.

42. Walk the path of Spirituality and Liberation

**பக்தனுக்குரிய முக்திப்பாதை:**

மானிடப்பிறவி அடைவது மிகவும் அரிய ஒன்று. பாட்டொன்றைப் பாடி அதைப் பெறமுடியாது. உடல், எஞ்சின் டிரைவர் போன்றது, மனம் அதைக் கண்காணிப்பது; ஜீவன் பயணி. எனவே இவற்றுள் ஒன்றுடன் மற்றதுக்கு எவ்வித உறவும் கிடையாது. நிவாரண நகரான மோட்சபுரியைப் பயணி அடைந்துதான் ஆகவேண்டும். இடையூறு இல்லா பயணத்துக்கு இறை நாமத்தை நினைவூட்டும் நாமஸ்மரணத்தைப் போல் நம்பிக்கையானது வேறெதுவுமில்லை. அந்நாமத்தின் இனிமையை அனுபவித்தவருக்கு களைப்பு, சலனம், சோம்பல் முதலியவை இருக்காது. அவர் தனது சாதனை எனும் பயணத்தை இன்பத்துடன், ஆர்வத்துடன், உறுதியான நம்பிக்கையுடன் நிறைவு செய்வார். இருப்பினும் சாதனைமூலம் இந்நிலையை அடைவதற்கு ஒழுக்கம் (சத்பாவம்) மிகவும் இன்றியமையாதது. பாவபயம் இல்லையேல் ஒழுக்கம் உருவாகாது; இறையன்பும் வளராது. இந்த பயம் பக்தியை வளர்க்கும். இறுதியில் அது இறைவழிபாடாக மாறும்.

மனிதனின் வீழ்ச்சிக்கு மடத்தனமே காரணம்; அது ஆட்டின் இயல்பைப் போன்றது! ஓர் ஆடு பள்ளத்தில் வீழ்ந்தால் எல்லாமே அதில் விழுந்துவிடும். அது அழிவு தரக்கூடியது. இதைத்தவிர்க்க நல்லது கெட்டது பற்றி சிந்திப்பது நல்லது. எதைச் செய்தாலும் அதன் நன்மை தீமைகளை முதலில் முடிவு செய்ய வேண்டும்; அதன்பின் அதில் ஈடுபடவேண்டும். எப்படிப்பட்டவராக இருப்பினும் சாவு யாரையும் விட்டுவைக்கப் போவதில்லை; தொடர்ந்து அது அனைவரையும் பயமுறுத்துகிறது; இன்று ஒருவர் இறந்தால் நாளை நீங்கள் இறக்கப்போகிறீர்கள்.

**43. Let go the ego in order to reach the Goal**

## குறிக்கோளை அடைய ஆணவத்தை அழியுங்கள்

தோட்டத்தில் மலர்ந்துள்ளவற்றைப் பாருங்கள்! தோட்டக்காரன் இன்று பூக்களைப் பறிக்கிறான்; மொட்டுக்கள் நாளை அவன் கரத்துக்கு வர இருக்கின்றன. அந்த நம்பிக்கையுடன் மொட்டுகள் மலரும்போது அவைகளின் முகத்தில் இன்பம் நிரம்பி வழிகிறது. அவைகள் துக்கப்படுகின்றனவா? ஒருக்காலும் கிடையாது. அவைகளின் முகம் வாடுகிறதா? அவற்றின் பிரகாசம் சிறிதேனும் குறைகிறதா? இல்லை. மறு நாள் தாங்கள் பறிக்கப்படுவோம் என்பதைத் தெரிந்து கொண்ட நொடியிலிருந்து அவைகள் தங்களை ஒப்படைக்க வலிமையுடனும் வியப்புடனும் தயார் செய்து கொள்கின்றன.

எனவே, அவற்றைப்போல் இறை நாமத்தை ஆர்வத்துடன் நினைத்த வண்ணம் கவலைப்படாமல் சோக உணர்வு இல்லாமல் இன்று ஒருவர் இறந்துவிட்டால், நமது முறை நாளை அல்லது என்றோ ஒரு நாள் உண்டு எனும் உறுதிபாட்டுடன் ஒருவன் சாதனை மூலம் தன்னைத் தயார் செய்து கொள்ளவேண்டும்.

உடல் நீண்ட கண்ணாடிகுழல் (tube) போன்றது; அதன் உள்ளே உள்ள உள்ளம் நிம்மதியில்லாமல் எப்போதும் மாறிக்கொண்டிருக்கும். அது படும்பாட்டைப் பார்த்து சாவு சிரித்துக் கொண்டே இருக்கிறது. ஜீவனாகிய பறவை ஒன்பது ஓட்டை உடைய பானைக்குள் இருக்கிறது; இந்தப் பறவைக்கு எப்படி இப்படி ஓர் உடல் கிடைத்தது என்று வியப்பாக இருக்கிறது; அந்தப் பானைக்குள் அது எப்படி வந்தது? எப்படி மேலே எழுகிறது, போகிறது? ஒன்பது கண்டங்கள், ஒன்பது உலகங்களைச் சேர்ந்த தேவர்களும் முனிவர்களும் மனிதர்களும் அனைவரும் உடல் சுமையைச் சுமக்கும் தண்டனையைப் பெற்ற வண்ணம் இருக்கின்றனர். இப்போது இவர்களுள் நண்பர்கள் யாவர்? பகைவர்கள் யாவர்? ஆணவம் மடிந்தொழியும்போது அனைவரும் நண்பர்களே, அதன்பின் பகைவர்கள் இருக்கமாட்டார்கள். இந்தப் பாடத்தை அனைவரும் நினைவில் கொள்ளவேண்டும்.

மனிதன் இன்ப துன்பத்தைச் செவி வழியாக அனுபவித்துக் கொண்டிருக்கிறான். எனவே கொடூரமான, கடுமையான வார்த்தைகளைத் தவிர்த்து, இனிமையான மென்மையான பிறரை மகிழ்விக்கும் சொற்களையே ஒருவர் பயன்படுத்த வேண்டும்; அதில் சத்தியத்தின் மென்மையும் இனிமையும் கலந்திருக்க வேண்டும்.

மென்மையான சொல்லில்கூட பொய்மை கலந்திருப்பின் அது அதிகமான துன்பத்துக்கு வழிவகுத்துவிடும். சாதகராக மாறிய ஒருவர் மென்மையான, மெய்மையான, பிறரை மகிழ்விக்கும் இன்சொற்களையே பயன்படுத்த வேண்டும். அப்படிப்பட்டவர்களை அவர்களுடைய நல்லியல்புகளைக் கொண்டே அடையாளம் காண இயலும். இந்த அடிப்படையில் சாதகம் செய்தவர்களின் மனம் மதுராவாகவும், இதயம் துவாரகையாகவும் உடல் காசியாகவும் இருக்கும்.

அவர்களால் பத்தாவது தலைவாயிலில் (ஆதாரம் அல்லது சக்கரம்) உள்ள பரஞ்சோதியை உணர இயலும். இதயம் தூய்மையாக இல்லையேல் இத்தனை முயற்சியும் வீண்தான். மீனைப் பாருங்கள்! இடைவிடாமல் நீருக்குள் இருப்பினும் அது தன்னுடைய முடை நாற்றத்தைச் சிறிதேனும் போக்கியிருக்கிறதா? இல்லை. இதயத்தில் ஆணவம் நிரம்பி வழியும்வரை மனிதன் இதயத்தூய்மைக்குரியவற்றை எத்தனை செய்தாலும் அவனுடைய முன்வினைப்பதிவு (வாசனை) மறையாது. அப்படிப்பட்ட மனிதன், 'நான்' , 'எனது' எனும் உணர்வை ஒழிக்க விரும்பினால் ஹரியை வணங்கவேண்டும். அவன் விருப்பு வெறுப்பற்ற சாதகனாக மாறியாக வேண்டும்.

ஒரே இதயத்தில் இதைப் போன்ற முரண்பாடுகள் (விகாரங்கள்) ஒன்றுசேர்ந்து இருக்கக் கூடாது. ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் இருளும் ஒளியும் ஒன்று சேர்ந்து இருக்க இயலாது. ஆறு தீய இயல்புகளின் ஆளுகைக்கு உட்பட்டவரின் மனம் அகங்காரம் எனும் மந்திரியால் ஆளப்படும். அப்படிப்பட்ட அமைச்சர்களை உடையவர்கள் அவர்கள் எத்தனை பெரிய பண்டிதராக, சாதுவாக, சந்நியாசியாக இருப்பினும் முட்டாள்களைவிட மோசமானவர்களே.

**44. Pursue the path of good and Godliness**

## தெய்வீகப் பாதையை தேர்ந்தெடுங்கள்

"கற்பூரத்தை சுமக்கும் கழுதை யானையாகிவிடுமா?" கழுதை சந்தன கட்டைகளைச் சுமப்பதால் யானையாகிவிடுமா|? அதனால் சுமையை உணரமுடியும். ஆனால் மணத்தை உணரமுடியாது; ஆனால் யானை சுமையை உணராது, மணத்தை உணரும்; இல்லையா? அதைபோலவே சாதகர்களும் சந்நியாசிகளும், பக்தர்களும் நற்செயல்கள், தெய்வீகம், சாத்திரம், வேதம் உபநிஷதங்களிலுள்ள தூய்மையான சத்தியத்தையும், தூய்மையான சாரத்தையும் மட்டுமே எடுத்துக் கொள்வர். அதற்கு மாறாக ஒருவர் வெறுமனே தனது பாண்டித்யத்தை, மேதாவிலாசத்தைக் காட்டும் வகையில் வாதப்பிரதிவாதங்களில் ஈடுபட்டுக் கொண்டே இருந்தால் வாதிடும் திறமை மட்டுமே வளரும். சத்தியத்தின் நறுமணத்தை நுகரமுடியாது; அவரை வேதங்கள், சாத்திரங்களின் பிறப்பிடம் என்று அவருடைய அடியார்கள் பாராட்டலாம்; ஆனால் சாரமே இல்லாத ஒருவரை, அறிவின் பிறப்பிடம் என்று எப்படிக் கூறமுடியும்? சாரத்தில் நாட்டமுள்ளோர் சுமையைப் பொருட்படுத்துவதில்லை. வெறும் பகுத்தறிவைப் பயன்படுத்துவோர் எவ்வித லாபமும் அடைவதில்லை. அன்பு (ப்ரேமை) ஒன்றே இறைவனை இடைவிடாமல் நினைப்பதற்குரிய பெரிய கருவி; அந்தக்

கருவியைச் சாதகர் பாதுகாப்பாகவும் வலுவாகவும் வைத்திருக்க விவேகம் எனும் வாளுறையைவிடச் சிறந்த உறை வேறெதுவும் இல்லை.

தாங்கள் விரிவாகக் கற்றவற்றை வாதங்களில் பயன்படுத்துவோரும் தங்களை உயர்ந்தவர்கள் என்று கருதுவோரும் உலகில் பெருமளவில் உள்ளனர்; இது பெரிய தவறு; உள்ளபடியே அவர்கள் கற்றவர்களாக இருப்பின் தகராறுகளில் அவர்கள் ஈடுபடவே மாட்டார்கள். மௌனமே மரியாதைக்குரியது என்பதை உணர்ந்தவர்களாக அவர்கள் இருப்பர். ஏனெனில் கற்று மேம்பட்டவர்கள் வேதங்கள், சாத்திரங்கள், உபநிஷதங்களின் சாரத்தை அனுபவித்தவர்களாக இருப்பார்கள். சாரத்தின் இயல்பு, அதன் மையம். அது வலியுறுத்தும் தூய தெவீகம் ஆகியவற்றை மற்றவர் எப்படி உணரினும் அவர்கள் மூன்றும் ஒன்றே என்றே பார்ப்பார்கள். இறைவன் எந்த வடிவை எடுத்தாலும் எப்படிப்பட்ட செயலில் வெளிப்படினும் தன்னுடன் தொடர்புகொள்ளும் ஒருவரின் உணர்வுகளுக்கேற்பவே அவர் தோன்றுகிறார் என்பதை அவர்கள் அறிவார்கள்.

**45. Practise single-minded devotion and equanimity**

## ஒருமை மனதுடைய பக்தி மற்றும் சமத்துவத்தை கடைபிடி

இவ்விரண்டில் ஒருமைமனம், சமத்துவம், விருப்பு, வெறுப்பு, விகாரங்களிலிருந்து விடுபட்டிருத்தல் முதலியவைதான் முக்கியமே ஒழிய வாதிடுவதில் திறமை பெறுவது முக்கியமல்ல. ஜபம், தியானம், பஜனை முதலியவற்றையும் மற்ற சாதனைகள் அனைத்தையும் நாம் ஏன் பெற்றிருக்கிறோம்? ஒருமனம் அல்லது ஒருமைப்படுதலை அடையத்தான், இல்லையா? அந்த ஒருமையை அடைந்துவிட்டால் அதன்பின் மனதில் முயற்சி தேவைப்படாது. அதன் உட்பொருள் அவனுக்குப் புலப்படும். எனவே சாதகர்கள் ஆக விரும்புவோரும் முக்தி அடைய விரும்புவோரும் வாதபிரதிவாதங்களுக்குச் செவிசாய்க்கக் கூடாது. தீய உணர்வுகள் எனும் சுருளுக்குள் அவர்கள் சிக்கக்கூடாது; தங்கள் தவறுகளைத் தாங்களே கண்டுபிடிக்க வேண்டும்; மீண்டும் அத்தவறுகளைச் செய்யக்கூடாது; தங்கள் வழியில் குறுக்கிடும் இடையூறுகள், கஷ்டங்கள், தொந்தரவுகள் எப்படிப்பட்டவையாக இருப்பினும் அவற்றையெல்லாம் தூசியாகக் கருதி, கவனம் முழுவதையும் தங்கள் குறிக்கோளில் செலுத்தி, தாங்கள் சம்பாதித்த ஒருமை மனதைப் பாதுகாத்துப் பேணவேண்டும். ஒருவர் ஆர்வமும் இன்பமும் ஊட்டும் விஷயங்களில் ஈடுபடவேண்டும். பெரியவை, சிறியவை அனைத்தின் மீதும் சந்தேகங்களை அடுக்கி விலை மதிப்பிலா நேரத்தை வீணாக்கக்கூடாது.

**46. Eschew conceit and doubt**

## இறுமாப்பு, சந்தேகம் இரண்டும் சாதகன் விலக்க வேண்டிய முக்கிய எதிரிகள்

முக்கியம் அல்லாதவை எத்தனையோ இருப்பினும் பின்வரும் இரண்டை சாரம் உடையதாக மனதில் பதிக்க வேண்டும். 1) எல்லாம் எனக்குத் தெரியும் எனும் இறுமாப்பு. 2) உண்டா இல்லையா என்று சந்தேகிப்பது. இவை இரண்டும்

சாதகரின் முக்கிய எதிரிகள். இந்தப் பகைவர்களை அடையாளம் காண்பது என்பதற்கு என்ன பொருள் எனில் ஒருவர் தன் உண்மையின் மீது உறுதியாக நிற்க வேண்டும் என்பதைத் தானே தீர்மானிக்க வேண்டும். அது உண்மையாக இருக்குமாகில் ஒவ்வொன்றும் உண்மையாகவே இருக்கும். இயற்கை பல வண்ணங்களில் திகழினும் நீங்கள் நீலக் கண்ணாடி அணிந்தால், அது அந்த வண்ணத்தில்தான் காட்சியளிக்கும் இல்லையா? உலகம் உங்களுக்கு வித்தியாசமானதாகத் தோன்றினால், அது உங்களிடம் உள்ள குறையால்தான், அனைத்தும் ஒரே ப்ரேமையாகக் காட்சியருளின் அது உங்களுடைய பிரேமை மட்டுமே. இந்த இரு காட்சிக்கும் உங்களுடைய உணர்வுதான் காரணம். ஒருவரிடம் குறை இருப்பதால்தான் அவனுக்கு உலகம் குறை உடையதாகக் காட்சி அளிக்கிறது. ஒருவரிடம் குறைகாணும் அறிவு இல்லையேல் அவர் எங்கே தேடினும் குறையைக் கண்டுபிடிக்க முடியாது. ஏனெனில் அவர்கள் குறைகள் எவைகள் என அறியாதவர்கள் இல்லையா?

இறைவனும் குறைகளைத் தேடுவதால் அவரிடமும் குறைகள் இருக்குமோ? என்று ஒரு வினா இப்போது எழலாம். ஆனால் இறைவன் குறைகளைத் தேடிகொண்டிருக்கிறார் என்று எப்படிக் கூறமுடியும்? அவர் தேடுவது நல்லதை மட்டுமே, குறைகளையோ பாவங்களையோ அல்ல. அவைகள் அவரவர் குணத்தின் தரத்தை அடிப்படையாகக் கொண்டவை. சொத்து, குடும்பம், கோத்ரம், அந்தஸ்து, ஆண், பெண் முதலியவற்றை இறைவன் சோதிப்பதில்லை. அவர் பார்ப்பது ஒழுக்கம் (சத்பாவம்) ஒன்றையே. அவர்கள் யாராக இருப்பினும், எப்படிப்பட்டவராக இருப்பினும் அப்படிப்பட்ட ஒழுக்கம் உடையவர்களையே, இறைவன் அவரது அருளுக்குத் தகுதியானவர்களாகக் கருதுகிறார்.

எனவே (சத்பாவத்தை) நல்லதை, ஒழுக்கத்தை வளர்த்துக்கொள்ளுங்கள். அன்புடன் இன்பத்துடன் செயல்படுங்கள், வாழுங்கள். இவ்விரண்டும் போதுமானவை; இவற்றின்மூலம் முக்தியை அடைந்துவிடமுடியும்.